# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 251/பேரூ/2023**
**நாள் : 20.11.2023**

திரு க. குமரேசன்,
கரைச்சுத்துப்புதூர்
திருநெல்வேலி மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். .... எதிர்மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை–வழி, கரைச்சுத்துப்புதூர், 120–A தென்மேல் பாகம் என்கிற முகவரியில் வசிக்கும் திரு க. குமரேசன், என்பவரது 11.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2023 அன்று பெறப்பட்டு, 251/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை–வழி, கரைச்சுத்துப்புதூர், 120–A தென்மேல் பாகம் என்கிற முகவரியில் வசிக்கும் திரு க. குமரேசன் என்பவர் தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

நான் திருநெல்வேலி மண்டலம் டவுன் பஞ்சாயத்தில் திசையன்விளை சிறப்புநிலை எல்லைக்கு உட்பட்ட கீரைக்காரன்தட்டில் வார்டு எண் 1ல் நிரந்தரமாக வசித்து வந்தேன். திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சியில் வார்டு எண் 2ல் கதவிலக்கம் 15/A, 15/A1, 15/2 குடிநீர் குழாய் இணைப்பு எண். 541 நிரந்தரமாக உள்ளது. முறையாக இன்று வரையிலும் நிலுவை இல்லாமல் வரி செலுத்தி உள்ளேன். நான் தற்பொழுது திசையன்விளை தாலுகா, கரைச்சுத்துப்புதூர் கிராமம், கதவிலக்கம் 120A, தென்மேல் பாகம் கரைச்சுத்துப்புதூரில் குடும்பத்துடன் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். சமூக ஆர்வலராகவும் செயல்பட்டு வருகிறேன்.

திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட இடத்தில் V. லெட்சுமி வணிக வளாக கடைகள், இரண்டு மாடி குடியிருப்பு வீடுகள் வரைபட அனுமதி பெறாமல், வரி விதிப்பும் செய்யாமல் சட்டவிரோதமாக இயங்கி வருகிறது.

திருநெல்வேலி மண்டலம் டவுண் பஞ்சாயத்துக்கள் AD, EO-க்கள் முறையே முதல்நிலை (கிரேடு I) EO-க்கள் இரண்டாம்நிலை (கிரேடு II) EO-க்கள் Selection Grade EO-க்கள் Special Grade ஆக நான்கு பிரிவுகளாக உள்ளனர். AD டவுண் பஞ்சாயத்து மாவட்ட ஆட்சித் தலைவரின் சிபாரிசின் பேரில்தான் தமிழ்நாடு முழுவதும் EO-க்களை தகுதியின் அடிப்படையில் ஒரு கிரேடில் இருந்து அடுத்த கிரேடுக்கு இயக்குநர் டவுண் பஞ்சாயத்து அவர்கள் தான் பதவி உயர்வு வழங்க வேண்டும். அப்படி பதவி உதவி பெற்ற EO–க்கள் தான் அவர்கள் தகுதிக்கேற்ற பஞ்சாயத்தில் பணிபுரிந்தால்தான் அதிகாரமோ, அதிகாரவரம்போ சட்டப்படி கிடைக்கும்.

திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி ஒரு தகுதி வாய்ந்த சிறப்புநிலை பேரூராட்சி ஆகும். எனவே Special Grade EO தான் பணியில் அமர்த்த முடியும். கடந்த காலங்களில் 2020–2021, 2021–2022–ல் பல சாதாரண EO-க்களை பொறுப்பு EO-க்களாக நியமித்து லஞ்சம் பெற்றுக் கொண்டு சட்டவிரோதமாக அதிகாரம் இல்லாமல் Self Cheque வரைபட அனுமதி மற்றும் பல உத்தரவுகள் போன்ற அனைத்துமே சட்டத்தின் கண்முன் செல்லுபடியாகாது. அதிகார துஷ்பிரயோகமாகும் Audit Report-ல் உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்து பல லட்சம் ரூபாய் வசூல் செய்யவில்லை. வீட்டு வரி 40%. தண்ணீர் வரி 20% க்கு மேல் வசூல் செய்யாமல் நிலுவை உள்ளது.

மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க தொகை குறைவாக நிர்ணயம் செய்தது. நிதி இழப்புகள் பல வகைகளில் பல இலட்சம் ரூபாய் இழப்பீடு உள்ளது.

உதாரணமாக திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி 2020–2021 தணிக்கையில் சேர்மத்துரை (ம) விஜயகுமார் மொத்த சதுர மீட்டர் 13759 சர்வே எண் 155/1A2, 155/1A3, இரண்டு மனைப்பிரிவுகளுக்கு பணம் வசூல் செய்துவிட்டு ஒரு மனைப்பிரிவிற்கு குறைவாக வசூல் செய்தது ரூ. 11,48,876/– ஆகும்.

திசையன்விளை பேரூராட்சி 2020–2022ம் ஆண்டு தணிக்கையில் கீழ்க்கண்ட இரண்டு மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒரு மனைப்பிரிவிற்கு உரிய தொகை முழுமையாக கணக்கிடப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது. மற்றொரு மனைப்பிரிவிற்கு உரிய தொகை குறைவாக கணக்கிடப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது. இந்நிதி இழப்பிற்கு வரித்தண்டவர், இளநிலை உதவியாளர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் பொறுப்பாவார் இழப்பு விபரம் கீழ்கண்டவாறு உள்ளது.

1) குறைவாக கட்டணம் கணக்கிட்டு குறைவாக வசூல் செய்த மனைப்பிரிவு விபரம்

| பெயர் | மனை அளவு சர்வே எண் | குறைவு ரூ. |
|---|---|---|
| சேர்மத்துரை (ம)விஜயகுமாரி | 13759 ச.மீ. | |
| | சர்வே எண். 155/1A2 | |
| | சர்வே எண். 155/1A3 | 11,48,876 |
| | வடிகால் வசதி | |

விசாரணை செய்யப்பட வேண்டியவர்கள்:

தனி நபர்கள் 1. V. லெட்சுமி க/பெ. குமராண்டி, 2. ஸ்ரீமுருகன் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர், பொன்மஹால் திருமண மண்டப உரிமையாளர், சேர்மத்துரை (ம) விஜயகுமாரி திசையன்விளை மற்றும் இத்துடன் இணைப்பில் கண்ட பல வரைபட அனுமதியற்ற பஞ்சாயத்துக்கு தீர்வை செலுத்தாத சட்டவிரோதமாக கட்டடம் கட்டி அனுபவித்து வருகின்ற அனைத்து உரிமையாளர்கள், அரசு ஊழியர்கள் விசாரிக்கப்பட வேண்டியவர்கள் சென்னை இயக்குநர் டவுண் பஞ்சாயத்து அலுவலகத்தில் பணிபுரியும் செல்வி. உமாமகேஸ்வரி ராமச்சந்திரன் JD சென்னையில் இருந்து பணியிடமாற்றம் கன்னியாகுமரிக்கு செய்த அரசாணை பிறப்பிக்கப்பட்ட பின்பும் அரசாணையை அமுல்படுத்தாமல் சொந்த ஆதாயத்திற்காக லஞ்சப்பணம் பெறுவதற்கு வசதியாக சென்னையிலேயே தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக சென்னை இயக்குநர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் டெல்லி பாபு சென்னை தலைமை அலுவலகம், திருநெல்வேலி மண்டலம் முன்னாள் AD டவுண் பஞ்சாயத்து பணி ஒய்வு பெற்ற குற்றாலிங்கம், திருநெல்வேலி மண்டலத்தில் பணி செய்துவிட்டு வேறு மாவட்டத்தில் பணிபுரியும் மாஹின் அபுபக்கர் AD லஞ்ச ஒழிப்பு குற்றச்சாட்டுக்கு ஆளான சேலம் AD டவுண் பஞ்சாயத்து S. கண்ணன் அவர்கள் இறுதியில் திருநெல்வேலி மண்டலத்தில் பணியாற்றிய AD டவுண் பஞ்சாயத்து S. கண்ணன் அவர்கள் ஏற்கனவே திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சியில் 17(b) குற்றக்குறிப்பாணை வாங்கி உடன்குடி பேரூராட்சியில் குற்ற வழக்கில் குலசேகரபட்டினம் காவல்நிலைய குற்ற எண்.45/2023 தற்காலிக பணிநீக்கம் செய்யப்படவில்லை. அவரை தற்காலிக பணிநீக்கம் செய்ய வேண்டும். விசாரணையும் செய்ய வேண்டும். திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சியில் பொறுப்பு E.O-க்களாக பணிபுரிந்த E.O. ஞானசுந்தரம், E.O. ராஜநம்பிகிருஷ்ணன், E.O.Sajan Mathew, E.O. கோபால், E.O. கிறிஸ்டோபர்தாஸ், இளநிலை உதவியாளர் அருள்லால், வரி வசூலர் அச்சுதன் மற்றும் ரமேஷ், திருநெல்வேலி மண்டல டவுண் பஞ்சாயத்து அலுவலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் கந்தசாமி, கிளார்க் ரமேஷ் டைப்பிஸ்ட் லெட்சுமணன், திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சியில் போலியாக குடிநீர் குழாய் இணைப்பு கொடுத்தும், பைப் அடைப்பு வேலைகள் செய்ததாக பொய்யான வவுச்சர் கொடுத்து பஞ்சாயத்து பணத்தை தனதாக்கிக் கொண்டே திரு. முருகன், டைப்பிஸ்ட் ஏற்கனவே 17(b) நிலுவையில் உள்ள எட்வின் ஜெயராஜ், டைப்பிஸ்ட் தற்போது நாசரேத்தில் பணிபுரிந்து வருபவர்கள். சுகாதார ஆய்வாளர் எட்வின் லாசா 17(b) குற்ற குறிப்பாணை வழங்கியவர் மற்றும் இரண்டு குற்றவழக்கு திசையன்விளை காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ள சுகாதார ஆய்வாளர் நவராஜ் தற்போதைய திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி வரிவசூலர் விஜயகுமார், பொறுப்பு தற்போதைய E.O.சுப்பிரமணியன் (இவர் வள்ளியூர், பணகுடி ஆகிய சிறப்புநிலை பேரூராட்சிகளையும் கவனித்து வருகிறார்) மற்றும் இளநிலை உதவியாளர் அருள்லால் கழிவு வரி, புதிய வரைபட அனுமதி, குப்பை கிடங்கிற்கு குடி தண்ணீர் குழாய் இணைப்பு பதிக்காமல் போலி வவுச்சர் மூலம் பல லட்சம் கையாடல், மூன்று கனிணி வாங்கியதில் கையாடல் செய்தது போன்ற பல குற்றச்சாட்டுகளுக்கு விசாரணையில் நான் நேரில் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்து ஆதாரங்களையும் கொடுத்து எனது புகார்மனு உண்மையென்பதை நிரூபிப்பேன். சென்னை இயக்குநர் அலுவலகம் செல்வி உமாமகேஸ்வரி JD அவர்கள்

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தும், லஞ்சப்பணம் பெற்று பினாமி பெயரில் சொத்துக்களும், சட்டவிரோத பண பரிமாற்றம் செய்து பினாமி பெயர்களில் கொடுக்கல் வாங்கலும் செய்து வருகிறார்கள். திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சியில் பணிபுரிந்த வரிவசூலர் அச்சுதன் மற்றும் ரமேஷ் கடந்த ஆண்டு வரிவசூல் Nil செய்யாமல் பல நிரந்தர குடியிருப்புகளை கழிவு வரியாக செய்துவிட்டு பஞ்சாயத்துக்கு பல லட்சம் ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுத்திவிட்டு திருநெல்வேலி மண்டலம் கண்காணிப்பாளர் கந்தசாமி, கிளார்க் ரமேஷ், முன் A.D. கண்ணன் அவர்கள் ஆகியோர்களுக்கு லஞ்சப்பணம் கொடுத்து மூலைக்கரைப்பட்டிக்கு E.O. Sajan Mathew, வரி வசூலர் அச்சுதன் மற்றும் ரமேஷ், இளநிலை உதவியாளர் அருள்லால் ஆகியோர் பணியிட மாற்றம் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்கள். மூலைக்கரைபட்டியிலும் பஞ்சாயத்து பணம் கொள்ளையடிக்கப்படுகிறது. திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த அருள்லால் போலி ஆவணங்கள் தயார் செய்து பஞ்சாயத்து பணம் கையாடல் செய்தது. வரைபட அனுமதியில் லஞ்சம் பெற்றது. எனது பல புகார் மனுக்களுக்கு ஒரு ஒப்புதல் கடிதமோ, எந்த விசாரணையும் நடத்தவில்லை. இறுதி உத்தரவும் பிறப்பிக்கவில்லை. எதிர்மனுதாரர்களிடம் லஞ்சப்பணம் பெற்றுக்கொண்டு மேற்கண்ட அனைவருமே எனது மனுக்கள் மீது சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. DVAC-லிருந்து அறிக்கை கேட்ட மனுக்களில் கூட இயக்குனர் டவுண் பஞ்சாயத்து அலுவலகத்தில் இருந்து தங்களது கீழ்நிலை அதிகாரிகளிடம் அறிக்கை கேட்டு பெற்றோ, கோப்புகளை கைப்பற்றியோ, என்னை விசாரணை செய்தோ எந்த இறுதி உத்தரவும் பிறப்பிக்கவில்லை. தமிழக தலைமை செயலாளர் அரசு ஆணைகளையோ, அலுவலக நடைமுறைகளையோ கடைபிடிக்காமல் சொந்த ஆதாயத்திற்காக மேற்கண்ட அனைவருமே லஞ்சம் பெற்றுக்கொண்டு புகார்மனு கோப்புகளில் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. அரசாணைகளும் அமுல்படுத்தவில்லை. நான் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை பெஞ்ச் கிளையில் வழக்கு தொடுப்பேன் என்று புகார் மனு அனுப்பிய பின்புகூட தலைமை செயலாளரின் அரசாணையின்படி மூன்று தினங்களுக்குள் ஒரு ஒப்புதல் கடிதமோ, ஒரு மாதத்திற்குள் விசாரணையை முடித்து எனக்கு எந்த கடிதமும் தரவில்லை. மேலும் எந்த விசாரணையும் இன்றி உள்நோக்கத்துடன் கெட்ட எண்ணத்துடன் சொந்த ஆதாயத்திற்காக அரசுக்கு, பஞ்சாயத்துக்கு பல கோடி ரூபாய் வருவாய் இழப்புகளை ஏற்படுத்தி விட்டார்கள். எனக்கு மனஉளைச்சலையும் ஏற்படுத்தி எனக்கு அரசியலமைப்படி உள்ள அடிப்படை உரிமையை தட்டிப்பறித்து எனது மனித உரிமையையும் பறித்து விட்டார்கள். மேற்கண்டவாறு என்னை அலைக்கழித்து அவமானப்படுத்திய காரணத்தால் இந்த மேல்முறையீட்டு மனுவை தங்கள் முன்பு தாக்கல் செய்கிறேன். தங்களுக்கு மேல்முறையீடு செய்தால்தான் இதில் நான் அதிக பொதுநலன்கருதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை பெஞ்ச் கிளையில் பஞ்சாயத்து நிர்வாகத்தை செம்மைப்படுத்தவும், அரசு சொத்தை அரசுக்கு ஆதாயப்படுத்தவும் முடியும். வழக்கும் தாக்கல் செய்ய முடியும். பஞ்சாயத்து அதிகாரிகள் மேற்கண்ட பலரும் என்னை பலவந்தப்படுத்தி அரசியலமைப்புச் சட்டப்படி எனக்கு உள்ள உரிமையை தட்டிப்பறித்து இந்த மேல்முறையீடு மனுவை தாக்கல் செய்வதை தவிர வேறு வழியில்லாமல் மேலே குறிப்பிட்ட அதிகாரிகள் செய்து விட்டார்கள். என்னை இந்த மேல்முறையீடு மனு தாக்கல் செய்ய வைத்துள்ளார்கள். சீனியர் சிட்டிசன் ஆகிய எனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி மன நிம்மதியையும் கெடுத்து விட்டார்கள். அதிக பொதுநலன் கருதி மேலே கண்ட காரணங்களால் இந்த மேல்முறையீட்டு மனுவை சமர்ப்பிக்கிறேன்.

மேலும் தமிழக அரசு ஆணை (வாலாயம்) எண்.2179 பொது(சிறப்பு–அ)த்துறை நாள் 22.05.2023 செல்வி. உமா மகேஸ்வரி JD சென்னையில் இருந்து மாவட்ட வருவாய் அலுவலர் கன்னியாகுமரிக்கு பணியிடமாற்றம் செய்த அரசாணை அமுல்படுத்தவில்லை.

26.04.2023 துப்புரவு பணியாளர் இசக்கிதேவி கொடுத்த புகாரான சுகாதார ஆய்வாளர் நவராஜ் மீது திசையன்விளை குற்ற எண். 65/2023 சட்டப்பிரிவு 294(b), 354(a), 506(ii) தெருவிளக்கு அலுமினிய பட்டிகளை திருடி பல லட்சம் விற்பனை செய்தது திசையன்விளை குற்ற எண் 36/2023 சட்டப்பிரிவு 379 IPC இணைப்பு ஆவணங்கள்.

மேலே கண்ட காரண காரியங்களால் மாண்புமிகு நீதியரசர் அவர்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு முறைமன்ற நடுவம், இம்முறையீட்டு மனுவினை சமர்ப்பிக்கிறேன்.

மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு முறைமன்ற நடுவம் எனது இந்த மேல்முறையீடு மனு மற்றும் பல புகார் மனுக்களையும் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு விரிவான விசாரணை மேற்கொண்டு சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும்படி பணிவுடன் வேண்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

(2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.10.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

<u>(i) செயல் அலுவலர் பணி நியமனம் குறித்த புகாருக்கு விளக்கம் பணிந்து சமர்ப்பித்தல்</u>

Grade II, Grade I, Selection Grade, Special Grade ஆகிய செயல் அலுவலர் பணியிடங்கள் பேரூராட்சியின் இயக்குநர் அவர்கள் மூலமாக பதவி உயர்வின் அடிப்படையில் நியமனம் செய்யப்படுவது உண்மையே ஆகும். திசையன்விளை பேரூராட்சியானது ஒரு சிறப்பு நிலை பேரூராட்சியே ஆகும். திருநெல்வேலி மாவட்டம் மட்டும் தமிழ்நாடு முழுவதற்கும் ஆன சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் பணியிடம் காலியாக உள்ளதால் அருகாமையில் உள்ள முதல் நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு கூடுதல் பொறுப்பாக சிறப்பு நிலை பேரூராட்சி பணிப்பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே இது நிர்வாக காரணங்களுக்குத்தானே அன்றி வேறேதற்குமில்லை என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும் ஒரே மாதிரியான பணியே ஆகும். மனுதாரர் தெரிவிப்பது போல் லஞ்சம் பெற்றுக்கொண்டு இப்பணியிடம் நிரப்பப்படுவதில்லை. எனவே விதிகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்வாக காரணங்களுக்காக மட்டுமே இப்பணியிடங்கள் வழங்கப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(ii) வரி மற்றும் தண்ணீர் கட்டணம் வசூல் விழுக்காடு குறித்த புகாருக்கு பதில் அறிக்கை

இப்பேரூராட்சி 2021–2022 வரை www.etownpanchayat.com இணையதளத்தின் மூலம் வரியினங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது. 2022–2023 முதல் மத்திய தகவல் மையம் இணைய தளமான www.drp.tn.nic இணையதளத்தில் சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட www.etownpanchayat.com இணையதளம் மூலம் 2020–2021 ஆம் ஆண்டு சொத்துவரி கேட்பு வசூல் நிலுவை அறிக்கையின் படி நடப்பு ஆண்டு 97.31% நிலுவையில், 84.44% சதவிதமும் வசூலிக்கப்பட்டுள்ளது. குடிநீர் கட்டணம் நடப்பு 58.63% நிலுவையில் 24.01% வசூலிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2021–2022 ஆம் ஆண்டு சொத்துவரி கேட்பு வசூல் நிலுவை அறிக்கையின் படி நடப்பு ஆண்டு 85.97% நிலுவையில் 39.55% சதவிதமும் வசூலிக்கப்பட்டுள்ளது. குடிநீர் கட்டணம் நடப்பு 75.76% நிலுவையில் 56.87% என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
மேலும் தற்போது வீடு வீடாக சென்று வரியினங்களுக்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டு வரியினங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பு நிதி ஆண்டில், 2023–24 நிலுவை தொகையான ரூ.25,25,584இல் ரூ. 6,47,503 வசூல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(iii) மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க தொகை குறைவாக வசூல் செய்து நிதி இழப்பு குறித்த புகாருக்கு அறிக்கை

மேற்கண்ட குற்றச்சாட்டானது தணிக்கை பத்தியின் அடிப்படையிலானது ஆகும். குறைவாக வசூலிக்கப்பட்டிருப்பது குறித்து தணிக்கை பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரு மனைகளும் சேர்மதுரை(எ) விஜயகுமாரி என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். உண்மையில் கணக்கீடு செய்யப்பட்டதில் தவறு ஏதும் இருப்பின் சம்பந்தப்பட்ட நில உரிமையாளரிடம் இருந்தோ அல்லது பொறுப்பு அலுவலரிடமிருந்து வசூலிக்கப்படும் என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது மேலும் இக்குறை சம்பந்தமாக 2020–21 தணிக்கை தடை பத்தி எண். 19(2) நிலுவையில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(iv) திசையன்விளை பேரூராட்சிக்கு குறைந்த நிலையிலான செயல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டது குறித்த புகாருக்கு விளக்கம்

ஏற்கனவே தெரிவித்தபடி இம்மாவட்டத்தில் மட்டுமின்றி தமிழ்நாடு முழுவதுமாக சிறப்பு நிலை செயலர் அலுவலர் குறைவாக உள்ளதால் அருகாமையில் உள்ள தேர்வுநிலை முதல் நிலை செயல் அலுவலர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்நியமனமானது தற்காலிக அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்வாகக் காரணங்கள் ஆகும் என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. 2020–21, 2021–22 காலக்கட்டத்தில் மட்டுமின்றி அதற்கு முன்னரும், பின்னரும் பல்வேறு நேர்வுகளில் திசையன்விளை பேரூராட்சிக்கு மட்டுமின்றி அனைத்து சிறப்பு நிலை பேரூராட்சிகளிலும் இதுபோன்ற தற்காலிக நியமனங்கள் நடைபெற்றுள்ளன. எந்தவொரு நேர்விலும் குறைந்த நிலையிலான செயல்அலுவலரை நிரந்தரமாக சிறப்பு நிலை

பேரூராட்சி செயல் அலுவலராக நியமிக்கப்படுவதில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(v) கட்டட உரிமம் வழங்குதல் மற்றும் தனது காசோலை மூலம் தொகை வரவு செய்தல் குறித்த புகாருக்கு விளக்கம்

கட்டட உரிமம் வழங்குதல், தனது காசோலை மூலம் வரைவு செய்தல் போன்றவைகள் அனைத்தும் ஒவ்வொரு பேரூராட்சிகளிலும் நடைபெறும் அன்றாட பணிக்கான தொடர்புடையதே ஆகும். திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி கட்டட உரிம கட்டண தொகை அனைத்தும் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 45 நாள் 12.05.2022ன்படி எவ்வித விடுதலுமின்றி வசூல் செய்யப்பட்டுவருகிறது. எனவே இதில் குறைபாடு ஏதும் இல்லை என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. இப்பணிகள் அனைத்தும் அனைத்து பேரூராட்சிகளிலும் ஒரே மாதிரியான நடைமுறைகளின் அடிப்படையில் செய்யப்படுவதாகும். இப்பேரூராட்சியில் தொலைபேசி கட்டணம், அலுவலக சில்லறை செலவின கட்டணம் மட்டுமே தனது காசோலையில் மூலம் வரவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடு ஏதும் இல்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே தனது காசோலை மூலம் வரவு செய்து தொகை வழங்கப்பட்டதில் யாதொரு முறைகேடும் நடைபெறவில்லை என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இப்பொருள் தொடர்பாக தணிக்கை அறிக்கையிலும் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(vi)கட்டட அனுமதியின்றியும், பேரூராட்சியால் வரிவிதிப்பு செய்யப்படாததாகவும் குறிப்பிடப்பட்டுள்ள புகாருக்கு விளக்கம்.

(A) திசையன்விளை பேரூராட்சி வார்டு 16 அற்புத விநாயகர் கோவில் தெருவில் வசித்து வரும் திருமதி லெட்சுமி க/பெ. குமாரபாண்டி என்பவர் திசையன்விளை பேரூராட்சி அலுவலக கட்டட அனுமதி எண். 210, 214, 2018–19 நாள் 29.01.2019 ன்படி குடியிருப்பு மற்றும் வணிகக் கட்டடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டடங்களுக்கு வரி விதிப்பு செய்தல் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திருமதி. லெட்சுமி என்பவரால் WP(MD) 15707/2020 ன்படி வழக்கு தொடரப்பட்டு முடிவுபெற்றது தற்போது வரிவிதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(B). திரு. முருகன் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளருக்கு கட்டட அனுமதி வழங்கியதற்கு, அனுமதியின்றி கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் உரிமையாளர் கட்டட அனுமதி பெற அறிவிப்பு வழங்கப்பட்டு தற்போது வரிவிதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(C). ஸ்ரீகௌசின் பிளாசா உரிமையாளர் து. மகேசன், சுபர்ணா என்பவரின் வணிகக் கட்டடம் முறையாக விரிவிதிப்பு செய்யப்பட்டு நடப்பாண்டு வரை சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.

(D). திசையன்விளை பேரூராட்சி பகுதிகளில் கட்டட அனுமதி பெறாமல் கட்டட விதிகளுக்கு முரணாக கட்டப்பட்ட அனைத்து கட்டடங்களுக்கு வரிவிதிப்பு செய்ய அரசாணை (நிலை) எண். 161 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)துறை நாள் 14.11.2000 மற்றும் பேரூராட்சிகள் இயக்ககம் சுற்றறிக்கை ந.க.எண். 1469/2023/5,நாள் 06.02.2023ன்படி குறிப்பிட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றி 26 கட்டடங்களை கண்டறிந்து முன் தேதியிட்டு மொத்தம் ரூ. 1,50,742 வரிவிதிப்பு செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டட உரிமையாளர்களுக்கு உரிய விதிமுறைகளின் படி வரிவிதிக்க சிறப்பினமாக கருதி அனைத்து வார்டுகளிலும் விரிவிதிப்பு செய்யப்படாத கட்டடங்களை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

(vii). பேரூராட்சிகளின் இயக்குநரக இணை இயக்குநர் அவர்களின் பணியிடமாற்றம் குறித்த புகாருக்கு விளக்கம் பணிந்து சமர்ப்பித்தல்.

சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரகத்தில் இணை இயக்குநராக பணிபுரிந்து வரும் செல்வி உமா மகேஸ்வரி என்பவரது பணியிடம் மாற்றம் குறித்த அரசாணை அமல்படுத்தாதது குறித்த புகாரானது திசையன்விளை பேரூராட்சி நிர்வாகத்தால் நிவாரணம் அளிக்கத்தக்கதல்ல என்பதையும் இப்பேரூராட்சி சார்ந்ததல்ல என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

(viii). முன்னாள் உதவி இயக்குநர்கள் மீதான புகாருக்கு விளக்கம்

முன்னாள் உதவி இயக்குநர்கள் திரு. ப. குற்றாலிங்கம் என்பவர் ஓய்வு பெற்று ஓராண்டு நிறைவு பெற்றுள்ளார். முன்னாள் உதவி இயக்குநர் திரு. மாஹின் அபுபக்கர் பணியிடமாற்றம் செய்யப்பட்டு தற்போது தஞ்சை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணியாற்றி வருகிறார். இவர்கள் மீது குற்றக் குறிப்பாணை நிலுவையில் இருப்பின், நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அதிகார அமைப்பு, பேரூராட்சிகளின் இயக்குநரும், அரசும் தானே அன்றி திசையன்விளை பேரூராட்சி நிர்வாகம் மூலமாக யாதொரு நடவடிக்கை, மேற்கொள்ள இயலாது என்பதால் புகாருக்கு பேரூராட்சி நிர்வாகம் பொறுப்பேற்க இயலாது என்ற விபரம் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

(ix) போலியாக அனுமதியற்ற குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது குறித்த புகாருக்கு விளக்கம்

திசையன்விளை பேரூராட்சியில் அங்கீகாரம் ஏதும் இன்றி முறைகேடாக குடிநீர் இணைப்பு வழங்கிய காரணத்திற்காக திரு. எட்வின் ஜெயராஜ் என்பவர் பேரூராட்சியின் முன்னாள் பொருத்துநர் மீது முறையாக ஒழுங்கு நடடிக்கை மேற்கொள்ளப்பட்டு குற்றச்சாட்டு குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. குற்ற அலுவலரின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை அலுவலரின் விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அலுவலரின் குறிப்பு பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு பேரூராட்சி இயக்குநர் அவர்களின் நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

திசையன்விளை பேரூராட்சி முன்னாள் பொருத்துநர் திரு. முருகன் என்பவர் மீது குறிப்பிட்டுள்ள பொய்யான செலவுச் சீட்டு அடிப்படையிலான முறைகேடு செய்திருப்பதாக

குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் எவ்வித ஆதாரமுமின்றி உண்மைக்கு புறம்பான புகார்களை தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் சுகாதார ஆய்வாளர் திரு. நவராஜ் என்பவர் மீது தொடரப்பட்ட குற்ற வழக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. தற்போது தனியர் நகராட்சி துறைக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு திருவண்ணாமலை மாவட்டம், போளுர் நகராட்சியில் பணியாற்றி வருகிறார் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(x). முன்னாள் இளநிலை உதவியாளர் திரு. அருண்லால் என்பவர் மீதான புகாருக்கு விளக்கம்

இளநிலை உதவியாளர் திரு. அருண்லால் மீதான புகார்களான கழிவு வரி புதிய வரைபட அனுமதி, குப்பை கிடங்கிற்கு மூடி அமைத்தல், தண்ணீர் குழாய் பணிகள் தொடர்புடைய புகார்களுக்கு உரிய ஆதாரத்தினை பெற்ற பின்னரே பதில் அளிக்க இயலும் என்பவதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே ஆதாரமற்ற புகார்களுக்கு பதில் அறிக்கை இயலாது என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அருண்லால் என்பவர் மீது எந்த ஒரு குற்றச்சாட்டும் நிலுவையில் இல்லாத நிலையில் DVAC மற்றும் பேரூராட்சியின் இயக்குநர் அலுவலகத்தில் இருந்தோ அறிக்கை ஏதும் கோரப்படாத நிலையில், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள லஞ்சப்புகார்கள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றதும் உண்மைக்கு புறம்பானதும், உள்நோக்கம் உடையதாகவும் உள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

(xi). வரிவிதிப்புகளை நீக்கம் செய்ததன் தொடர்பான புகாருக்கு விளக்கம்.

வரி வசூலர்கள் திரு. அச்சுதன் மற்றும் திரு. ரமேஷ் ஆகியோர் இருவர் மீதான அழிவு வரி தொடர்புடைய புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய விளக்கம் கோரப்பட்டுள்ளது. உண்மையில் தவறு நடைபெற்று இருப்பது கண்டறியப்படின், மேற்காண் இருவர் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள உயர் அலுவலருக்கு பரிந்துரைக்கப்படும். மேலும் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உண்மையில் தவறு நடைபெற்றிருப்பது கண்டறியப்பட்டால் வரி விதிப்பில் இருந்து தவறுதலாக செய்யப்பட்ட இனங்கள் அனைத்திற்கும் மீண்டும் விரிவிதிப்பு செய்யப்படும் என்ற விபரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்காண் இருவர் மீதான குற்றாட்டுகள் மீது அலுவலக ஆவணங்கள் ஆய்வு செய்ததில் 2021–22ம் ஆண்டில் 192 சொத்துவரி விதிப்புகளும் 2022–23ம் ஆண்டு 13 சொத்துவரி விதிப்புகளும் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் தொடர்பாக ஒழுங்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும் புகார்கள் தொடர்பாக சென்னை, பேரூராட்சிகள் இயக்குநரக ஆய்வு அலுவலர் அவர்களால் கடந்த 13.09.2023, 14.09.2023 மற்றும் 15.09.2023 ஆகிய மூன்று நாட்கள் திசையன்விளை பேரூராட்சியில் தலஆய்வு ஆவண ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனிஅலுவலர் அவர்களின் ஆய்வறிக்கை அடிப்படையில் பேரூராட்சி இயக்குநர் அவர்களால் முறையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு என்பதன் அடிப்படையில் புகார்தாரர் விரும்பினால் வழக்கு தொடரலாம் எனவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலரும் திருநெல்வேலி முகாமில் 06.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. சு. குமரேசன் என்பவர் 06.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி, இம்முறைமன்ற நடுவத்தில் 11.08.2023 நாளிட்ட மனுவில் சமர்ப்பித்துள்ள விவரங்களே தனது வாக்குமூலமாக பதிவு செய்யும்படி கோரி 1 முதல் 128 பக்கங்கள் கொண்ட ஆவணங்களை கூடுதலாக இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

6) திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர், திருமதி லௌலின் மேபா என்பவர் 06.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் திரு குமரேசன் என்பவரின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திசையன்விளை பேரூராட்சியில் செயல் அலுவலர் பணி நியமனம் 2) சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம் 3) மனைப் பிரிவு அங்கீகாரம், 4) குறைந்த நிலையில் செயல் அலுவலர் நியமனம் 5) கட்டட உரிமம் வழங்குதல் 6) காசோலை மூலம் தொகை வரவு செய்தது 7) கட்டடங்களுக்கு வரி விதிப்பு செய்யப்படாதது 8) போலியான அனுமதிற்ற குடிநீர் இணைப்பு மற்றும் பேரூராட்சி அலுவலர் மீதான புகார் போன்றவற்றிற்கு இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 5.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையே எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொண்டு அதன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. சு. குமரேசன், என்பவர் தனது 11.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சியில் பேரூராட்சியின் கட்டட அனுமதியின்றியும் குறைந்த சொத்துவரி விதிக்கப்பட்டும் பல்வேறு வணிகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் இயங்கி வருவதாகவும், தகுதி வாய்ந்த செயல் அலுவலர்களை பேரூராட்சியில் நியமனம் செய்யப்படாதது, வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த பேரூராட்சி அலுவலர்கள்/ பணியாளர்கள் போலியான ஆவணங்கள் மூலம் வரிவசூல் செய்து அரசுக்கு நிதியிழப்பு ஏற்பட்டு உள்ளதாகவும் என புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

(i) பேரூராட்சியில், V. லெட்சுமி வணிக வளாகக் கடைகள் மற்றும் 2 மாடி குடியிருப்பு கட்டடங்கள் வரைபட அனுமதியின்றியும், சொத்துவரி விதிப்பும் செய்யாமல் சட்ட விரோதமாக இயங்கி வருகிறது. குறைவான சொத்து வரி விதித்தன் மூலம் ரூ.11,48, 876 தொகை நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

(ii) சிறப்பு நிலை தரத்தில் செயல்பட்டு வரும் திசையன்விளை பேரூராட்சியில் சிறப்பு நிலை செயல் அலுவலரை பணி நியமனம் செய்யாமல், செயல் அலுவலர் பொறுப்பு நிலையில் பணியில் அமர்த்துவதால், பேரூராட்சி நிர்வாக தரத்தின் குறைவு ஏற்பட்டுள்ளது.

(iii) மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க குறைவாக நிர்ணயம் செய்து, நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(iv) சொத்துவரி 40% மற்றும் குடிநீர் வரி 20%க்கு மேல் வசூல் செய்யாமல் நிலுவையில் உள்ளது.

(v) வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ள பேரூராட்சிகள் இயக்குநகரத்தில் பணிபுரியும் இணை இயக்குநர் செல்வி உமாமகேஸ்வரி என்பவர் பணியிட மாற்றம் ஆணை வெளியிடப்பட்டும் தொடர்ந்து சென்னையில் முறைகேடாக 10 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார். மேலும் திசையன்விளை பேரூராட்சியில் பொறுப்பு நிலையில் பணிபுரிந்த 5 செயல் அலுவலர்கள், வரிவசூலர், சுகாதார ஆய்வாளர், இளநிலை உதவியாளர், கண்காணிப்பாளர் ஆகியோர்கள் மீது பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பவதற்கு காரணமாக இருந்து, பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

(vi) போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்டுத்தப்பட்டது.

மனுதாரர் தனது புகார் மனுவில், திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சியில் பெரும் நிதியிழப்பு ஏற்பட்டதற்கு காரணமானவர்கள் மற்றும் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளனர் என திசையன்விளை பேரூராட்சியில் பணியாற்றிய மற்றும் பணியாற்றி வரும் பெரும்பாலான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது புகார் தெரிவித்துள்ள நிலையில், இப்புகார்கள் குறித்து, திசையன்விளை பேரூராட்சியில் கையாளப்பட்டு வரும் ஆவணங்கள் மூலம் விரிவான ஆய்வு மேற்கொண்டால் மட்டுமே புகாரின் உண்மைத் தன்மையும், புகாருக்குள்ளானவர்களின் பங்கினையும் அறிய முடியும் என இம்முறைமன்ற நடுவம் கருதுவதால், மனுதாரர் திரு. க. குமரேசன் சமர்ப்பித்துள்ள புகார் மனு குறித்து, உயர் அளவில் உள்ள பேரூராட்சி அலுவலர்கள் கொண்ட ஒரு குழுவை (Committee) பேரூராட்சிகள் இயக்குநரால் நியமனம் செய்து அக்குழு மூலம் புகாரினை ஆய்வு செய்து, அதன் அறிக்கையினை 45 நாட்களுக்குள் பெற்று, பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக கண்டறியப்பட்டால், அவர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகள் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரர் தனது மனுவில், திசையன்விளை பேரூராட்சியில் 2020–21 மற்றும் 2021–22ஆம் ஆண்டுகளில் சொத்துவரி மற்றும் குடிநீர் வரி போன்றவை குறைவாக கணக்கீடு செய்து வசூல் செய்யப்பட்டுள்ளதால் பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவித்த நிலையில் மனுதாரரின் புகாரான நிதியிழப்பு ஏற்பட்டதற்கான உண்மைத்தன்மையும் மற்றும் நிதியிழப்புக்கு காரணமாக இருந்தவர்களை கண்டறியும் பொருட்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் மூலம் தணிக்கை செய்து, அதன் அறிக்கையை பேரூராட்சிகள் இயக்குநருக்கு 45 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சிகள் நிதித்தணிக்கை துறை இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கை மூலம் பேரூராட்சியில் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட அலுவலர்கள்/ பணியாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறை ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகள் இயக்குநரை அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, நவம்பர் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு சு. குமரேசன்,
120–A, தென்மேல்பாகம்,
கரைச்சுத்துப்புதூர்,
திசையன்விளை–வழி
திருநெல்வேலி மாவட்டம்–627 657.

2) செயல் அலுவலர்,
திசையன்விளை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்–627 657

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) முதன்மைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

5) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை–600 035.

6) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்